# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:**33 **தேதி:** 06.04.2015

# மத்திய சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே !

**முன்னாள் தொலைதொடர்பு அமைச்சர் தயாநிதி மாறனின் சொத்துக்கள் ஜப்தி**:-

AIRCELL-MAXIS விஷயத்தில் முன்னாள் தொலைதொடர்பு அமைச்சர் தயாநிதி மாறனின் 700 கோடி ரூபாய் சொத்துக்களை அமுலாக்கத்துறை ஜப்தி செய்துள்ளதாக TIMES OF INDIA தெரிவித்துள்ளது. தொலை தொடர்பு அமைச்சராக தயாநிதி மாறன் இருந்த போது, ஏர்செல் நிறுவனத்தை சார்ந்த சிவசங்கரனை, தனக்கு சொந்தமான ஏர்செல் நிறுவனத்தின் பங்குகளை மலேசிய நிறுவனமான MAXISக்கு விற்க கட்டாயப்படுத்தினார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதற்கு கைமாறாக MAXIS நிறுவனத்திடமிருந்து தயாநிதி மாறன் பெருந்தொகை பெற்றுள்ளதாக மத்திய புலனாய்வுத் துறை குற்றம் சாட்டியுள்ளது.

**7000 கோடியில் BSNL நிறுவனம் நாடு முழுவதும் Wi FI HOTSPOT தரவுள்ளது**:-

அதிவேக கம்பியில்லா சேவை கொடுக்கும் நோக்கத்தோடு நாடு முழுவதும் BSNL நிறுவனம் 7000 கோடி ரூபாய் செலவில் Wi FI HOTSPOT சேவை தரவுள்ளதாக CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தா கூறியுள்ளார். இந்த HOTSPOTS 3G மற்றும் 4G வலைதளங்களோடு ஒருங்கிணைக்கப்படும். இதற்காக QUADGEN WIRELESS நிறுவனத்தோடு BSNL ஒப்பந்தமிட்டுள்ளது. இந்த வருட இறுதிக்குள் 2,500 HOTSPOTகள் உருவாக்கப்படும் என CMD தெரிவித்துள்ளார்.

**மோசமடைந்து வரும் சேவைகளுக்காக தொலைதொடர்பு அமைச்சர் தனியார் நிறுவனங்களை எச்சரித்துள்ளார்**:-

தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத், சேவைகள் மோசமடைந்து வருவதற்கு எதிராக தனியார் நிறுவனங்களை எச்சரித்துள்ளார். தனியார் நிறுவனங்கள் நிறைய ஸ்பெக்ட்ரங்களை வைத்துள்ளதால், அழைப்புகள் Drop ஆவது போன்ற புகார்கள் இருக்கக் கூடாது என அமைச்சர் கூறியுள்ளார். மேலும், சமீபத்திய

ஸ்பெக்ட்ரம் ஏலத்தின் காரணமாக ஒரு நிமிடத்திற்கான கட்டணம் 1.3 பைசாவை காட்டிலும் அதிகரிக்கக் கூடாது என்றும் கூறியுள்ளார்.

**09.04.2015 அன்று முதன்மை தொழிலாளர் நல ஆணையர் பேச்சு வார்த்தை:-**

2015 ஏப்ரல், 21 மற்றும் 22ஆம் தேதி வேலை நிறுத்தத்திற்கான அறைகூவலை FORUM கொடுத்ததின் தொடர்ச்சியாக முதன்மை தொழிலாளர் நல ஆணையர் (மத்திய) 09.04.2015 அன்று பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பஞ்சப்படி உயர்வு உத்தரவை தொழிலாளர் நல அமைச்சகம் வெளியீடு:-**

UNSKILLED தொழிலாளர்களின் பஞ்சப்படியை 01.04.2015 முதல் உயர்த்தி, ஒரு நாள் ஊதியமாக A Class நகரங்களுக்கு ரூ.348/- எனவும், B Class நகரங்களுக்கு ரூ.290/- எனவும் மற்றும் C Class நகரங்களுக்கு ரூ.233/- எனவும் மாற்றி தொழிலாளர் நல அமைச்சகம் 30.03.2015 அன்று உத்தரவு வெளியிட்டுள்ளது.

**கொல்கொத்தா அகில இந்திய மாநாட்டு அமைப்பு சட்ட திருத்தங்கள் தொழிற்சங்க பதிவாளரால் ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டது:-**

கொல்கொத்தாவில் நடைபெற்ற BSNL ஊழியர் சங்கத்தின் 7ஆவது அகில் இந்திய மாநாட்டில் அமைப்பு சட்டங்களில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களுக்கு தொழிற்சங்க பதிவாளர் ஒப்புதல் வழங்கியுள்ளதாக நமது மத்திய சங்கம் தெரிவித்து உள்ளது. எனவே இந்த திருத்தங்கள் உடனடியாக அமுலுக்கு வருகிறது. அடுத்த டெலிகுருசேடர் இதழில் இந்த திருத்தங்கள் வெளியிடப்படும். திருத்தப்பட்ட அமைப்புச் சட்டத்தை மத்திய சங்கம் விரைவில் கொண்டு வர உள்ளது. இந்த திருத்தங்கள் விரைவில் ஒப்புதல் பெறுவதற்கான சிறப்பான முயற்சிகளை மேற்கொண்ட நமது துணைப் பொது செயலாளர் தோழர் ஸ்வபன் சக்ரவத்தி அவர்களையும், அலுவலக செயலாளர் தோழர் பிஜு அவர்களையும் மத்திய சங்கம் மனதார பாராட்டுகிறது.

வாழ்த்துக்களுடன்

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**